

# சரியான பார்வை... சரியான வழி... சரியான செயல்!

– தா.நெடுஞ்செழியன்

6

பெற்றோர்கள் மாணவர்களின் கல்வியைத் தாண்டி உலக நடப்புகளை, நாட்டு நடப்புகளை பொதுவாக என்ன சூழல்கள் உள்ளன என்பதை மாணவர்களுக்கு தெளிவுறக் கூற வேண்டும். ஏனெனில் இனி வரக் கூடிய காலங்களில் ஊடகம் வாயிலாகவும் இண்டர்நெட் வாயிலாகவும் வரக் கூடிய எண்ணற்ற தகவல்களை மாணவர்கள் எடுத்து, அவற்றில் இது சரியா? இது தவறா? இது நேர்ந்திருக்க வாய்ப்பு உள்ளதா? வாய்ப்பு இல்லையா? என்பதை ஆராய்ந்து, பிறருடன் அவற்றைப் பற்றி கலந்தாலோசிக்கக் கூடிய அளவுக்கு நல்ல சூழ்நிலையைப் பெற்றோர்கள் உருவாக்கித் தர வேண்டும்.

கல்வியைத் தாண்டி பரவலான விஷயங்களை உள்வாங்கி அதனை வைத்து அவர்கள் முடிவு எடுப்பது நன்றாக அமையும்.

பாடம் மட்டுமே வாழ்க்கை– இவ்வளவு மதிப்பெண்கள் மட்டுமே வாழ்க்கை – என்பதைத் தாண்டி வெளியே ஓர் உலகம் இருக்கிறது; அந்த உலகத்தின் தேவைகள் வேறு; அந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நாம் என்னவெல்லாம் செய்யப் போகிறோம்? என்பன போன்ற ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை பள்ளிகள் மாணவர்களுக்கு ஏற்படுத்தவில்லை என்றால் பெற்றோர்கள் அவற்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து பொது அறிவு என்பது மிக மிக முக்கியமானது. இன்றைய தலைமுறை மாணவர்களுக்கு பொது அறிவைத் தருவதற்கு இப்போதைய பள்ளிகள் முயற்சி எடுப்பதில்லை. அந்தக் காலத்தில் எல்லாம் பள்ளிக்கூடத்தில் ஒரு கரும்பலகையில் குறுஞ்செய்திகளை மாணவர்களே எழுதிப் போடுவார்கள். என்ன எழுதிப் போடுகிறார்கள் என்று ஆர்வமுடன் தினம்தோறும் நிறைய மாணவர்கள் அவற்றைப் படிப்பார்கள். அந்தத் தகவல்கள் மாணவர்களின் மனதில் பசுமரத்தாணி போல பதிந்துவிடும்.

'மனப்பாடம் செய்யுங்கள், நிறைய மதிப்பெண்கள் எடுங்கள்' என்று பள்ளிகளில் சொல்வது மிக மிகத் தவறு. மாணவர்களுக்கு நிறைய நினைவாற்றல் உள்ளது. உதாரணமாக ஒரு மாணவர் வீட்டிலிருந்து பள்ளிக்குக் கிளம்பிச் செல்லும்போது, வழியில் உள்ள எல்லா முக்கியமான இடங்களும் அவருடைய மனதில் பதிந்துவிடும். எங்கே ஏடிஎம் உள்ளது, எங்கே பேங்க் உள்ளது, எங்கே மருத்துவமனை உள்ளது என்பதெல்லாம் தானாகவே அவருடைய மனதில் பதிந்துவிடும். அவற்றை எளிதாக திரும்பவும் நினைவில் கொண்டு வரவும் அவரால் முடியும். கல்விச்சுமை என்ற பெயரில் பள்ளிகள் நிர்ப்பந்தப்படுத்துவதாலோ, பெற்றோர் நிர்ப்பந்தப்படுத்துவதாலோ மாணவர்களின் இம்மாதிரியான இயல்பான திறமைகள் மறைந்துவிடும். முன்பெல்லாம் ஒவ்வொருவரும் 20–30 தொலைபேசி எண்களைக் கூட நினைவில் வைத்திருப்பார்கள். இப்போது மொபைல் போன்கள் வந்த பிறகு, நமது வீட்டில் உள்ளவர்களின் எண்களைக் கூட நாம் நினைவில் வைத்திருப்பதில்லை. தொழில்நுட்ப வளர்ச்சியினால், நமக்கு இயற்கையாக அமைந்துள்ள நினைவுத்திறனைக் கூட நாம் இழந்துவிடுகிறோம்.

ஒரு குறிப்பிடத்தக்க மேற்கோள் ஒன்று உள்ளது. IF YOU STUDY TO REMEMBER, YOU WILL FORGET. IF YOU STUDY TO UNDERSTAND, YOU WILL REMEMBER. இதில் நாம் எல்லாருமே முதலில் சொன்னதைத்தான் கடைப்பிடிக்கிறோம். எல்லாவற்றையும் ஞாபகப்படுத்துவதற்கு மட்டும்தான் படிக்கிறோம். நன்றாகப் புரிந்து படிப்பது கிடையாது.

புரிந்து படிக்கும் பழக்கத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்தினால், அந்தக் கல்வியை வைத்துக் கொண்டு எதிர்காலத்தில் என்ன மாதிரியான சூழல்கள் வந்தாலும், அந்தச் சூழல்களைப் புரிந்து கொண்டு மாணவர்கள் எளிதில் அவற்றைக் கையாளும் திறமையைப் பெற்றுவிடுவார்கள்.



மாணவர்கள் பிளஸ் டூ வருவதற்கு முன்பே – ஆறாவது படிக்கத் தொடங்கும்போதே – பெரும்பான்மையான பெற்றோர்கள் மாணவர்களை பல்வேறு பயிற்சிகளுக்கு (கோச்சிங் கிளாஸ்) அனுப்புகிறார்கள். எதிர்காலத்தில் அவர்கள் என்ன படிக்க வேண்டும் என்பதற்கான பயிற்சிகளாக அவை இருக்கும். இதனால் சிறுவயதிலேயே அவர்கள் ஏற்கெனவே உள்ள படிப்புச் சுமையுடன் கூடுதலான சுமைகளைச் சுமக்க வேண்டியிருக்கும். 'குருவி தலையில் பனங்காயை ஏற்றுகிற மாதிரி' சுமைகளை மாணவர்கள் மீது ஏற்ற ஏற்ற படிப்பின் மீதான வெறுப்பு அவர்களுக்கு அதிகரிக்கவே செய்யும்.

ஆறாவது படிக்கும்போதே ஒரு மாணவருக்கு 4–5 ஆண்டுகளுக்குப் பின் எழுதப் போகும் நுழைவுத்தேர்வுக்கு பயிற்சி தரத் தொடங்கிவிடுகிறார்கள். ஆனால் எந்தவொரு நுழைவுத் தேர்வின் தேர்வு முறையிலும் நான்கைந்து ஆண்டுகளில் மாற்றம் ஏற்பட்டுவிடுகிறது. ஐஐடி யில் ஒவ்வோராண்டும் தேர்வுமுறையை மாற்றிவிடுகிறார்கள். ஆறாவது படிக்கும்போதிலிருந்தே ஒரு நுழைவுத்தேர்வுக்காகப் பயிற்சி எடுத்தது எல்லாம் வீணாகிவிடும்.

மேலும் இந்தவிதமாகத் திட்டமிட்டு அவர்களை ஒருமுகப்படுத்துவதால் மாணவர்களுக்கு இயல்பாக வளர வேண்டிய பிற திறமைகள் வளராமல் போய்விடும். அவர்களுக்குள்ளே அடங்கியுள்ள எண்ணற்ற திறமைகள் எவை என்பது தெரியாமலேயே அழிக்கப்பட்டுவிடும்.

கல்விநிலையங்களும் சரி, பெற்றோரும் சரி மாணவர்களைச் சுதந்திரமாகப் படிக்க அனுமதிக்க வேண்டும். பத்தாவது வரைக்கும் மாணவர்களை வலுக்கட்டாயமாக கோச்சிங் கிளாசுகளுக்கு அனுப்பவே கூடாது. பள்ளிகளில் என்ன சொல்லித் தரப்படுகிறதோ அவற்றை மட்டும் அவர்கள் புரிந்து படித்தால் போதுமானது. மனப்பாடம் பண்ணாமல் புரிந்து படித்து மாணவர்கள் தேர்வு எழுதும்போது, அதற்கு ஆசிரியர்கள் போதுமான மதிப்பெண்கள் போடவில்லை என்றால் மாணவர்கள் அதைப் பற்றி அதிகமாகக் கவலைப்படக் கூடாது. அப்படி மதிப்பெண் போடாதது ஆசிரியரின் கல்வி பற்றிய அறிவு ஒரு குறுகிய எல்லைக்குள் இருப்பதையே காட்டுகிறது. மாணவர்களின் தனித்திறமையை அங்கீகாரம் செய்யக் கூடிய அளவுக்கு ஆசிரியருக்குத் திறமை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

பெற்றோர்களுக்கு போதிய கல்வி பற்றிய விழிப்புணர்வு இல்லாததால், பெரும்பான்மையான பள்ளிகள் பெற்றோர்களைத் தவறாக வழி நடத்திச் செல்கின்றன. மாணவர்கள் 10 ஆவது படிக்கத் தொடங்கும்போதே, மாணவர்களின் பெற்றோரும் சரி, அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் சரி, மாணவர்களிடம் கேட்கும் கேள்வி: பொறியியல் படிக்கப் போகிறாயா? மருத்துவம் படிக்கப் போகிறாயா? என்பதுதான்.

உற்றார் உறவினர்கள், தெரிந்தவர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக, இதைத்தான் படிக்கப் போகிறேன் என்று மாணவர்கள் சொல்லக் கூடாது. அந்தப் படிப்புக்கு அட்மிஷன் கிடைத்தாலும் கிடைக்கலாம், கிடைக்காமலும் போகலாம். எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் இதுதான் படிக்கப் போகிறேன் என்று மாணவர்கள் சொல்லிவிட்டால், ஒரு வேளை கிடைக்காவிட்டால் அதை அவர்கள் அந்த இளம் வயதில் எப்படி எதிர்கொள்வார்கள்? எதிர்காலத்தில் இப்படி ஆக வேண்டும் என்று மாணவர்களின் சிந்தனையைத் தூண்டிவிட்டுவிட்டு, நிகழ்காலத்தில் என்ன செய்ய வேண்டுமோ, அவற்றைச் சரிவரச் செய்யவிடாமல் அவர்களைத் தடுப்பது எந்தவிதத்தில் நியாயம்? எதிர்காலத்தை நினைத்துக் கொண்டே நிகழ்காலத்தை நாம் தொலைத்துவிடக் கூடாது.

எதிர்காலத்தில் மருத்துவம் படிப்பதற்காக, தகவல் தொழில்நுட்பம் படிப்பதற்காக நிகழ்காலத்தில், இன்றைக்குப் படிக்க வேண்டிய கெமிஸ்ட்ரி, மேத்ஸ் ஆகியவற்றை மாணவர்கள் படிக்காவிட்டால் எந்த பயனுமில்லை. அது நமது நேரத்தை வீணாக்குவதாகும்.

என்ன படிக்கப் போகிறீர்கள் என்று கேட்கும் யாரிடமும் எதையும் முடிவாகச் சொல்லாமல், ''நான் எல்லாவற்றிற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறேன், எதற்கு அட்மிஷன் கிடைக்கிறதோ அதைப் படிப்பேன்'' என்று மாணவர்கள் திட்டவட்டமாகச் சொல்லிவிட வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்கு மன அழுத்தம் இருக்காது; நிம்மதியாக இருப்பார்கள். அவர்கள் தற்போது படிப்பதை எந்தவிதமான மன அழுத்தமும் இல்லாமல் நன்றாகப் படிப்பார்கள்.

மாணவர்களை ஊக்குவிக்கும்விதமாக பெற்றோர்கள் நடந்து கொள்ள வேண்டும். ''உனக்கு நிறையத் திறமைகள் உள்ளன. உன்னால் உலகில் நிறையச் சாதிக்க முடியும்'' என்று அவர்களின் சிந்தனைகளை சாதனைகளின்பால் ஒருமுகப்படுத்தி, ஆக்கப்பூர்வமான அணுகுமுறையுடன் அவர்களிடம் நடந்து கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தவறு செய்துவிட்டால், உடனே அவர்களைத் திட்டக் கூடாது. ''நீ இப்படிச் செய்திருப்பதற்குப் பதிலாக இது மாதிரி செய்திருக்கலாமே?'' என்று ஆலோசனை கூறும் விதத்தில் அவர்களிடம் பேச வேண்டும். ''இனிமேல் இது போன்று தவறுகளை நீ செய்ய மாட்டாய் என்ற நம்பிக்கை எனக்குள்ளது'' என்று அவர்களிடம் சொல்வது ஆக்கப்பூர்வமான ஒரு வழிமுறை.

குழந்தைகளின் சிறிய வெற்றிகளைக் கூட பெற்றோர் கொண்டாட வேண்டும். அவர்களைப் பாராட்ட வேண்டும். ஆனால் இப்போது வீட்டிலும் சரி, பள்ளியிலும் சரி, குழந்தைகளைப் பாராட்டுவதே இல்லை. இது குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதி.

முன்பெல்லால் கூட்டுக் குடும்பம் இருந்தது. வீட்டில் தாத்தா, பாட்டி இருந்தார்கள். இளம் வயதினரிடம் அன்பு செலுத்தி அவர்களை நல்வழிப்படுத்தினார்கள். இன்றோ வீட்டில் தாய், தந்தை இருவருமே வேலைக்குச் சென்றுவிடுகிறார்கள். வீட்டில் குழந்தைகளுடன் பேச, அவர்களைப் புரிந்து கொள்ள, அவர்களிடம் அன்பு செலுத்த எல்லாம் இப்போது பெற்றோருக்கு நேரம் இருப்பதில்லை. இதனால் ஆக்கப்பூர்வமான வழிகளில் அவர்களை ஊக்குவிக்க முடிவதில்லை.

(தொடரும்)

கட்டுரையாசிரியர்: சமூக கல்வி ஆர்வலர்
www.indiacollegefinder.org